©
தமிழ்நாடு அரசு
2023

பதிவெண் : எம்.

# திருவண்ணாமலை மாவட்ட அரசிதழ்
## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

எண் 3 ] திருவண்ணாமலை, வெள்ளிக்கிழமை, மார்ச் 31, 2023.
பங்குனி 17, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு 2054.

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

ந.க.எண். டி1/34362/2022, நாள் : 27-03-2023

ந.க.எண்.2542/2022/எச்1, நாள் : 21-03-2023

**திருவத்திபுரம் நகராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.**

**திருவத்திபுரம் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.85 நாள்: 27-12-2022-ன்படி பொது சுகாதாரப்பிரிவு தற்காலிக ஆக்கிரமிப்பு கட்டணம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம்-பயனர் கட்டணம் வசூலிப்பது குறித்து இயற்றப்பட்ட துணை விதி குறித்த அறிவிக்கை.**

**திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016**

1. இந்த அறிவிக்கையின்படி இந்த நகராட்சி எல்லைக்குள் இணைக்கப்பட்டிருக்கும் அனைத்து பகுதிகளிலும் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்பு கடைகளான வண்டி கடைகள் மற்றும் தரை கடைகள் ஆகியவற்றிற்கு பொருந்தும்.

2. இவ்வறிவிக்கையின்படி 25 சதுரடி வரையிலான கடை ஒன்றுக்கு தற்காலிக ஆக்கிரமிப்பு கட்டணம் ரூ.50 + திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணம் ரூ.50 ஆக மொத்தம் ரூ.100 தினசரி கட்டணமாக வசூலிக்கப்படும். கூடுதலான ஒவ்வொரு 25 சதுரடிக்கும் ரூ.100 கூடுதல் கட்டணமாக வசூலிக்கப்படும்.

3. இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தாத கடைகள் இந்நகராட்சி எல்லை பகுதிக்குள் கடை நடத்த அனுமதி கிடையாது. மீறி நடத்தினால் கடையில் உள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்படும்.

4. இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் 01-04-2023 முதல் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பணியாளரால் வசூல் செய்யப்படும்.

5. இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கடைகள் பொது மக்கள் நடமாட்டம் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கப்படக்கூடாது. மீறினால் உடனடியாக அப்புறப்படுத்தப்படும்.

6. இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கடைகளில் மத்திய, மாநில அரசுகள் மற்றும் நகராட்சியால் தடை செய்யப்பட்ட பொருட்கள் எதனையும் பயன்படுத்தவோ, விற்பனை செய்யவோ கூடாது.

7. 01-04-2023 அன்று கடைகள் எவ்வளவு பரப்பளவில் அமைந்துள்ளதோ அதன்பிறகு அதனை விட கூடுதலாக அமைக்கக்கூடாது.

8. கடை நடத்தும் நபர் தன்னால் கடை நடத்த இயலவில்லை என்றால், கடையை காலி செய்துவிட வேண்டும். வேறு நபர்களுக்கு உள்வாடகைக்கு விடக்கூடாது.

9. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி கடைகளில் உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து நகராட்சி பணியாளர்களிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும். கண்ட இடங்களில் வீசி எறியக்கூடாது. குப்பைகளை எரிக்கக்கூடாது.

10. சமைக்கப்படாத ஆடு, மாடு, கோழி மற்றும் பன்றி இறைச்சிகளை கண்டிப்பாக விற்பனை செய்யக்கூடாது. சமைத்த இறைச்சி உணவுகளை விற்பனை செய்யலாம். உணவு பறிமாறப்படும், பொட்டலமிடும் பொருட்கள் தடை செய்யப்பட்டவைகளாக இருக்கக்கூடாது.

11. காய்கறிகள், பழங்கள், பூக்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் கடைகளில் அதிகளவு குப்பைகள் உருவாவதால் அவற்றை நகராட்சி பணியாளர்களிடமே வழங்க வேண்டும். கால்நடைகளுக்கு வழங்கக்கூடாது.

12. தற்காலிக கடைகள் தரை விரிப்பினிலோ அல்லது வண்டிகளிலோ மட்டுமே அமைக்கப்பட வேண்டும். நிரந்தர கட்டடம் கட்ட அனுமதியில்லை.

13. கடை அமைக்கப்பட்ட இடத்தை குடியிருப்பு பகுதியாக பயன்படுத்தக்கூடாது.

14. ஆடு, மாடு, கோழி மற்றும் பன்றி போன்ற கால்நடைகளை கடை அமைந்துள்ள இடத்தில் வளர்க்கக்கூடாது.

15. போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது என பொதுமக்கள், உயர் அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், காவல் துறை ஆகியோரிடமிருந்து புகார் வரும்பட்சத்தில் சம்மந்தப்பட்ட கடைகள் அப்புறப்படுத்தப்படும்.

திருவத்திபுரம்,
2023 மார்ச் 21.

கி. இரகுராமன்,
*ஆணையாளர்,*
*திருவத்திபுரம் நகராட்சி.*

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் விருத்தாசலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.